RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22295

OPEN ACCESS

# அகநானுற்றில் தலைவியின் குணநலம்

**மா. மோனிஷா [அ, *], அ. கலைவாணி [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்க்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -641043, தமிழ்நாடு, இந்தியா.

# The Heroine's Character in Akananuru

**M. Monisha [a, *], A. Kalaivani [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, India

* Corresponding Author: monishaba27@gmail.com

Received: 26-09-2022
Revised: 08-11-2022
Accepted: 01-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Sangam literature is a mirror of time that captures the civilization, culture and customs of the Tamil people. The poets of the Sangam period have divided the songs into two categories namely as akapapadals and purapapadals. These songs reflect the experiences of ancient Tamil life. In Akananuru the songs are written on the basis of verse and number. The five- landforms system has many different aspects of human life. According to the nature of each land, the way of life and thought of man are different. This article describes that the primary role of environment in human life changes.

**Keywords:** Sangam literature, Akananuru, Akapapadal, Purapapadal

## முன்னுரை

சங்க இலக்கியம் அகம் புறம் என இரண்டாக பகுந்துள்ளது. தலைவன் தலைவி இடையே உள்ள வேட்கையின் இயல்புகளையும், தலைவன் தலைவி மீது கொண்டுள்ள காதலையும் தலைவன் செயலால் தலைவியின் ஊடலும் உளவியல் பாங்கில் எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உளவியல் அல்லது மனோதத்தும் (psychology) என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடந்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பண்பாட்டு ஒழுங்கு முறையாகும். உளவியலின் அடிப்படையான மனிதனின் உள்ளுணர்வு, அறிவும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்பூக்கம், ஆளுமை, நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்பு ஆகியவற்றைக் குறிப்பதே ஆகும்.

## உளவியல் நோக்கில் தமிழ் இலக்கியம்

உளவியல் பற்றிய சிந்தனைகள் ஆரம்ப காலக்கட்டத்தில் தத்துவவாதிகளான சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்களால் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. தத்துவக் கருத்துகளுக்கு இணையாக உளவியல் சிந்தனைகள் சங்க இலக்கியங்களில் பரவிகிடப்பதை காணமுடிகிறது. தமிழில் உளவியல் சிந்தனையை கூறியவர் திருவள்ளுவர்.

“அடுத்ததுகாட்டும் பளிங்கு போல் நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம்”

குறிப்பறிதல் எனும் அதிகாரத்தில் உளவியல் கோட்பாடுகளை பற்றி திருவள்ளுவர் கூறியிருப்பது வியக்கத்தக்கது (Puliyur Kesigan, 2009).

## மனையோள் மாண்பு

இல்லத்திற்கு அணிகலமாய்த் திகழும் பெண்ணின் மாண்புகளை தொல்காப்பியர்,

“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்து பிறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”

என்று கூறியுள்ளார் (Ilampuranar, 2005). வாழ்க்கைத் துணைநலமாய் விளங்கும் பெண், அன்பு, கற்பு, பொறை, ஒழுக்கம், விருந்தோம்பல், சுற்றம் பேணல் முதலிய ஆறுகுணங்களைப் பெற்றுத் திகழ்தல் சிறப்பாகும். மேலும் இக்குணங்களும் பிறசிறந்த குணங்களையும் ஒருங்கே பெற்ற தலைவியை,

“அன்பும் மடறும் சாயலும் இயல்பும்

என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்

ஒன்றுபடு கொள்கை யோடு” (Venkadasamy Nattar, 2007)

என்று தலைவியின் மாண்பு போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளதைக் காணலாம்.

## தலைவியின் பண்பு

ஊடல் என்பது காதலின் சிறப்பாகக் கருதப்படுகிறது. மிகுந்த அன்பின் வெளிப்பாடே ஊடலாகும். தலைவனோடு தலைவி ஊடல் கொள்வது மரபாகும். தலைவன் பரத்தையோடு சென்று நீராட்டு அயர்ந்து மீண்டு வரும் போது தலைவி ஊடல் கொள்கிறாள். அந்நிலையில் தலைவன் தலைவியைப் பொய்யாகப் புகழ்கின்றான். இதனை,

“இளமை சென்று தவத் தொல்லஃதே

இனிமை எவன் செய்வது பொய்ம்மொழி மெக்கே”

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம் (Venkadasamy Nattar, 2007). மேலும் தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டதால் தலைவி அவனிடம் முகம்கொடுக்காமல் மறுத்துப் பேசி வாயில் மறுக்கிறாள். இதனை,

“பெருநீர் வையை அவளொடு ஆடிப்

புலர மார்பினை வந்துநின்று எம்வயின்”

என்ற வரிகளில் தலைவி ஊடல் கொண்டு வாயில் மறுத்துப் பேசக் காரணம் பரந்தமையுடன் புதுப்புனல் ஆடியதே காரணம் என்பதை அறியலாம் (Venkadasamy Nattar, 2007).

## தலைவியின் அன்பு

தலைவன் தலைவியைப் பொருள்வயிற் பிரிந்தான். பிரிவினை ஆற்றாத தலைவி உடல் மெலிந்தாள். அதனை கண்ட தோழி ஆற்றியிருப்பது மகளிருக்குரிய கடமை என்கிறாள். இதனால் நீ

வருந்த வேண்டாம் என்கிறாள். இதைக் கேட்ட தலைவி தோழி மீது கோபம் கொண்டு பேசுகிறாள். இதனை,

“புலம்பெயர்ந்து உறைதல் செல்லாது அலங்குதலை

விருந்தின் வெங்காட்டு வருந்தி வைகும்”

என்ற வரிகள் அழகான காட்டில் வெப்பம் அதிகமாக இருப்பதால் வருத்தமுற வைக்கிறது. வெப்பம் காரணமாக மழையின்றி அருவிகள் காய்த்துபோயின. காட்டில் உள்ள மான்களும், குருவிகளும் வெப்பக்கதிரை நீரென நினைத்து அதை அருந்த ஓடுகின்றது. அதைபோல் தலைவனும் அத்தகைய இடங்களில் எல்லாம் கடந்து சென்றுள்ளார் என்று தலைவி வருத்தம் கொண்டு தோழியிடம் கூறுகிறாள் (Venkadasamy Nattar, 2007). இதன் மூலம் தலைவன் மீது தலைவி கொண்ட அன்பு புலனாகின்றது. இரவுக்குறியில் வரும் தலைவனை எண்ணி வருந்துவதை.

“இருள் கிழிப்பது போல் மின்னி வானம்

துளி தலைக்கொண்ட நளிபெயல் நடுநாள்”

இரவு நேரத்தில் மழை மேகத்தை உடைத்து பொழிந்து கொண்டிருக்கிறது (Venkadasamy Nattar, 2007). இதனால் மின்மினிப்பூச்சிகள் வெளிவந்து வெளிச்சத்தை தருகிறது. அத்தகைய அடர்ந்த காட்டில் தலைவன் இரவில் வந்து என்னை காண வருதல் அச்சம் தரும் செயல் ஆகும். ஆகையால் தலைவன் இரவு நேரத்தில் வர வேண்டாம் என்று தலைவன் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துவதை,

“நெஞ்சம் படுதலின் ஒன்று புரிந்து அடங்கி

இரவின் வருஇடும்பை நீங்க”

களவு ஒழுக்கத்தில் தலைவியை காணவரும் தலைவனின் செயல்களும் தலைவன் அறத்தின் தன்மையையும் தலைவி நினைந்து வருந்தம் கொள்வதையும் உணரலாம் (Venkadasamy Nattar, 2007).

## தலைவியின் உள்ள உணர்வு

தலைவியின் உள்ளத்தின் இயல்புகளை சங்க இலக்கியங்கள் அதிகமாக கூறுவதை காணலாம்.

“மையற் பெண்டிர்க்கு நொல்வல் ஆக

ஆடிய பின்னும் வாடிய மேனி”

தலைவி தலைவனின் பிரிவால் தலைவனை நினைந்து பசலை நோய் ஏற்பட்டுவிட்டது. அதனை தலைவி அன்னையிடமும் செவிலியிடமும் மறைக்கிறாள் (Venkadasamy Nattar, 2007). இதனால் தலைவியின் உள்ளம் போராட்டமான நிலையில் இருக்கிறது. அச்சமயத்தில் அன்னை வெறியாட்டு நடந்த திட்டமிடுகிறாள். இதனால் தலைவி களவு வெளிப்பட்டுவிடுமே என்றும் அச்சம் கொள்கிறாள். இந்நிலையை,

“உள்ளின் உள்ளம் வேமே உள்ளா

திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி”

என்னும் பாடல் அடிகளின் மூலம் அறியலாம் (Sanmugapillai, 1994).

## தலைவியின் உள்ள நடுக்கம்

ஓர் இலக்கினை அனுகவும் விலகவும் தூண்டும் வலுவான போக்குகள் ஒரே நேரத்தில் நிலவும்போது உள்ள நடுக்கம் ஏற் படும். தம்மால் விரும்பப்படும் ஒரு செயல் தாம் எதிர்பாராத பொழுதில் நிகழும்போது அதன் விளைவு நன்மையாகவும் இருக்கலாம் அல்லது தீயவையாகவும் இருக்கலாம் என்ற தவிப்பு இயல்பானவை என்பதை,

"ஓடுங்குரர் ஓதி நினைக்கும் அற்றோ?

நடுங்கின்று அளித்து என் நின்ற இல்நெஞ்சம்"

அறியலாம் (Venkadasamy Nattar, 2007). பெண் ஆமை இட்ட முட்டையை அடைகாத்து பாதுகாக்கும். ஆண் ஆமை என்கிற குறியீடு இதுவரை நிகழ்ந்த களவினை தலைவன் தலைவி இருவருமே மறைவாக வைத்திருந்தனர் என்பதை குறிக்கிறது. இரவுக்குறியில் தலைவன் வருவதை போல பகல்குறியில் வந்து அலர் ஏற்பட காரணமாகிவிடுவானா என்கிற உள்ள நடுக்கம் ஏற்படுகிறது. மறைவாக ஒன்றை வைத்திருக்கையில் அது வெளிப்படும் போது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் ஏன்கிற உளவியல் ரீதியான நடுக்கம் என்பதை காணலாம்.

## தலைவியின் பகுப்பாய்வுத்திறன்

மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சியாக பாலுணர்வு செயல்படுகிறது. பாலுணர்ச்சியானது தன் போக்கில் செயல்படாமல் சமுதாய கோட்பாட்டிற்கு இணக்க சமுதாய கட்டாயத்தின் அடிப்படையில் பண்பாடு, நாகரீகம், மரபு இவற்றின் அடிப்படையில் செயல்படுகிறது.

"நீடலர் ஆசிவருவர் வல்லென

கங்குல் உயவுத்துணை ஆசிய

துஞ்சாது உறைவி இவள் உவந்ததுவே"

இப்பாடலில் தலைவி தனக்கு உதவி செய்த தோழியை நினைவுபடுத்தி தலைவனிடம் தோழியை புகழ்ந்து உரைக்கிறாள் (Venkadasamy Nattar, 2007), இதனையை வள்ளுவர்

"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது" (Puliyur Kesigan, 2009)

தக்க சமயத்தில் உதவிபுரிந்தவர் அவர் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அதை உலகை விட பெரியதாக கருதவேண்டும் என்று கூறுகின்றார். தலைவிக்கு தலைவன் தான் முக்கியமானவனாக இருப்பினும் தலைவனிடமே தோழியை புகழ்ந்து உரைப்பதே தலைவியின் உளப்பாங்கு புலனாகிறது.

## முடிவுரை

சங்க கால மக்களின் வாழ்வியல் உண்மைகளை நமக்கு அகநானூறு நன்கு புலப்படுத்துகின்றன. இந்நூல் அக வாழ்வில் தலைவியின் பண்பு நலன்கள் அவளின் மனநிலை ஆகியவற்றை வெளி உலகத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. தலைவனை பிரிந்து வாடும் தலைவியின் உள்ள வருத்தமும், தலைவன் மீது கொண்ட அன்பும், பரத்தையர் பிரிவால் தலைவன் மேல் கொண்ட ஊடல் இதனால் வாயில் மறுத்தல் போன்ற செய்திகளை இக்கட்டுரையின் மூலம் காணமுடிகிறது.

## References

Ilampuranar, (2005) Tholkapiyam, Saradha Pathippgam, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Thirukural, Thendral Nilayam, Chidambaram, India.

Sanmugapillai, M. (1994) Kurunthogai, Tamil University, Tanjavur, India.

Venkadasamy Nattar, N.M. (2007) Agananuru, Kalaga Veliyedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License